


## 12. 10. 2025

### தலைப்பு செய்திகள்

1. இந்தியா - செஷல்ஸ் இடையே இருதரப்பு ஒத்துழைப்பு மேம்படும் என பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சி அடைந்த பாரதம் தொடர்பான "விக்சித் பாரத் பில்டத்தான்" நிகழ்ச்சியில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க மத்திய அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் அழைப்பு விடுத்துள்ளார்.

3. தஞ்சாவூர், மயிலாடுதுறை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் இன்று நடைபெறுகிறது.

4. தமிழகத்தில் 2 ஆயிரத்து 200 பேராசிரியர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளதாக மாநில அமைச்சர் திரு.கோவி செழியன் கூறியுள்ளார்.

5. புதுதில்லியில் இந்தியாவிற்கு எதிரான 2ஆவது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டிஸ் ஃபாலோ ஆன் செய்து 2ஆவது இன்னிங்ஸை தொடர்கிறது.

### இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி சிஷெல்ஸ் நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் பேட்ரிக் ஹெர்மினிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், டாக்டர் பேட்ரிக்கின் ஆட்சி காலத்தில் இருநாடுகளுக்கிடையிலான நட்புறவு மேலும் வலுப்பெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருநாட்டு மக்களின் நல்லுறவு மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதுடன் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

*************

**தர்மேந்திரபிரதான்**

வளர்ச்சி அடைந்த பாரதம் தொடர்பான விக்சித் பாரத் பில்டத்தான் நிகழ்ச்சியில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய தேசிய கல்வி கொள்கை மற்றும் பல்வேறு இந்திய மொழிகளின் பன்முக தன்மையை பறைசாற்றும் வகையில் நாளை காலை 10 மணிமுதல் 11 மணிவரை இந்நிகழ்வு நடைபெறுவதாக அவர் கூறினார்.

இதன்ஒருபகுதியாக சமூக ஊடகங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட 10 இந்திய மொழிகளில் இதற்கான அறிவிப்பையும் அமைச்சர் வெளியிட்டார்.

*************

**கீர்த்தி வர்தன் சிங்**

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய வனம் மற்றும் சுற்றுசூழல் துறை இணை அமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் நடைபெறும் இயற்கை பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய அவர், அதிகரித்து வரும்

நகரமயமாக்கல் சூழலில் பசுமை நகரங்கள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்று சூழலை பாதுகாக்க ஒருங்கிணைந்த திட்டமிடலின் அவசியத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர், மின்சார வாகன போக்குவரத்தை அதிகரிப்பது, எரிசக்தி, நீர் மேலாண்மை உள்ளிட்டவற்றுடன் இந்தியாவின் பொலிவுரு நகர திட்ட செயல்பாடுகளை பட்டியலிட்டார்.

*************

**அனிதா ஆனந்த்**

இந்தியா - கனடா இடையே பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்த பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் இன்று நடைபெறுகின்றன.

3 நாள் பயணமாக இந்தியா வரும் கனடா வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த், மத்திய அமைச்சர்கள் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திரு.பியூஷ்கோயல் உள்ளிட்டோருடன் வர்த்தக விரிவாக்கம், எரிசக்தி, பாதுகாப்பு, உள்ளிட்ட துறைகளில் வியூக ஒத்துழைப்பு, கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து மும்பை செல்லும் கனடா அமைச்சர் இருநாடுகளுக்கிடையிலான வர்த்தக முதலீட்டு நடவடிக்கைகள், வேலை வாய்ப்பு உருவாக்கம், பொருளாதார வாய்ப்புகள் குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

*************

**கல்வி அமைச்சகம்**

நாடுமுழுவதும் கல்வி நிறுவனங்களில் UPI சேவையை பயன்படுத்தி பணம் செலுத்தும் முறை பின்பற்றப்பட வேண்டும் என மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் பெற்றோர், மாணாக்கரின் வசதி, மற்றும் நிர்வாக நவீனமயமாக்கலை உறுதி செய்ய நுழைவு மற்றும் தேர்வுகட்டணங்களில் ஒரேமுறை பின்பற்றப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*************

போலியோ

தமிழகத்தில் விருதுநகர், நெல்லை, சிவகங்கை தஞ்சாவூர், மயிலாடுதுறை செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் இன்று நடைபெறுகிறது.

இம்மாவட்டங்களில் 7 லட்சத்து 88 ஆயிரம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் திருநீர்மலையில் மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இம்முகாமை தொடங்கிவைத்தார்.

விருதுநகரில் மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன் இம்முகாமை தொடங்கிவைத்து, கஞ்சநாயக்கன்பட்டி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நடைபெறும் முகாம்களை நேரில் பார்வையிட்டார்.

சிவகங்கையில் மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் இம்முகாமை தொடங்கிவைத்து, போலியோ நோயை முற்றிலும் அகற்ற, 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்கனவே சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும், இன்றைய முகாமை பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

நெல்லை மாவட்டத்தில் 964 முகாம்கள் மூலம் ஒரு லட்சத்து 33 ஆயிரம் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் தெரிவித்துள்ளார். **------வாய்ஸ்-----**

**************

**கோவி செழியன்**

தமிழ்நாட்டில் இன்னும் ஒருமாதத்திற்குள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2 ஆயிரத்து 200 பேராசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் கடந்த 8 மாதங்களில் 16 புதிய கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக கூறினார்.

**வாய்ஸ்**

கல்வி, சுகாதாரம், தொழில்துறையுடன் விளையாட்டுத்துறையும் முதன்மையாக விளங்குவதாக கூறிய அவர், குறிப்பாக அடித்தட்டு மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கான விளையாட்டு வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**************

**சேகர்பாபு**

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு வரும் டிசம்பர் 8ஆம்தேதி நடைபெறும் என மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசின் தங்க முதலீடு திட்டத்தின் கீழ் திருக்கோவில்களிலிருந்து பெறப்பட்ட ஆயிரத்து 74 கிலோ தங்கம் உருக்கப்பட்டு, 17 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் மாநிலத்தில் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்ற நிலையில் திருப்பணிகளுக்காக உபயதாரர்கள் மூலம் ஆயிரத்து 512 கோடி ரூபாய் பெறப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

**************

**அணை**

**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கன மழையால்** மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 59 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதனிடையே அணையின் நீர்மட்டம் கடந்த 24 மணிநேரத்தில் 3 அடி உயர்ந்து 115 அடியை எட்டியுள்ளது.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து** 57 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**மாநிலத்தின் இரண்டாவது பெரிய அணையான** ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக 102 அடி கொள்ளளவு கொண்ட அணையின் நீர்மட்டம் தற்போது 98 அடியாக உயர்ந்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் மழை நீடிப்பதால் தேனி மாவட்டம் கும்பகரை அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில் 2ஆவது நாளாக சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

*************

**வானிலை**

தெற்கு கடலோர ஆந்திரம் மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருச்சி, தென்காசி மதுரை திண்டுக்கல் நீலகிரி கோவை தேனி திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

*************

**நாமக்கல் ஒத்திகை**

நாமக்கல் மாவட்டத்தில் தீ விபத்தில்லா தீபாவளியை கொண்டாடுவது குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.அப்பாஷ் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

**************

**போதை பொருள் ஒழிப்பு**

"போதை ஒழிப்போம் விபத்தில்லா தமிழகம் படைப்போம்" தொடர்பான விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் செங்கல்பட்டில் இன்று நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர் பொதுமக்கள் இதில் கலந்துகொண்டனர்.

மது மற்றும் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் தர்மபுரியிலும் இன்று நடைபெற்றது.

இதனிடையே திருத்தணி ரயில் நிலையத்தில் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை கடத்தி வந்த சென்னையை சேர்ந்த 6 இளைஞர்களை வடக்கு மண்டல காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**************

**விபத்து**

கிருஷ்ணகிரி மாவட்டம் பேரண்டபள்ளி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் சேலம் மாவட்டத்தை சேர்ந்த 4 இளைஞர்கள் உயிரிழந்தனர்.

பெங்களூருவிலிருந்து கிருஷ்ணகிரி சென்ற வேன், கார், சரக்கு லாரி, ஒன்றன்பின் ஒன்றாக மோதியதில் காரில் பயணம் செய்த நான்கு பேர் உயிரிழந்தனர்.

இவ்விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

*************

## கிரிக்கெட்

புதுதில்லியில் இந்தியாவிற்கு எதிரான 2ஆவது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டிஸ், ஃபாலோ ஆனுடன், தனது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடி வரும் நிலையில், சற்றுமுன் 1 விக்கெட் இழப்பிற்கு 29 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக 3-ம் நாளான இன்று 140 என்ற நேற்றைய ஸ்கோருடன் தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த வெஸ்ட் இண்டிஸ் 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 518 declared.

இப்போட்டியில் இந்தியாவிற்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக காணப்படுகிறது.

*************

## மகளிர் கிரிக்கெட்

உலக கோப்பை மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விசாகப்பட்டிணத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இந்தியா - ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

*************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**